# SENIOR JOURNALISTS ENRICHED ON INVESTIGATIVE JOURNALISM



“Adrenaline rush is what keeps me in this field of crime journalism” says Mahalingam Ponnusamy, Editor-Input, News18Tamil Nadu, at a session with the CAJ students at Loyola College on 20 February 2023. He has more than a decade long experience in the field and he described the standard operating procedure and the importance of source to uncover truth in crime journalism. Law terminology is often used to describe the grounds of the case, and RTI’s play a major role in obtaining facts and information on the case that a journalist is working on. The nitty gritties while working on a case and protecting the source are a real concern. Sensationalizing a crime is immoral and should be avoided at all cost, instead raising awareness to the populace is what a journalist should do. Executing sting operations and difficulties faced during the times were shared by Mahalingam which intrigued the crowd. While responding to the budding journalists on RTI, he says that the potency of RTI is extensive, which gives the commoner an idea about the regime and unravels a lot. Scam and its related queries were discussed and how NGOs can confederate through a working flow on a case. Interesting examples and experience were shared throughout the session which shone on the newer area of crime and investigative journalism.



Crime Selvaraj a popular face that you could recognize easily when you follow up YouTube interviews on crime reports. His lecture to the student of CAJ was all about the stories that he had done, and sharing how to build sources to lead on investigation and crack-up the crime. The number of sources that you build is what keeps journalists aware and verify information. To be on good terms with cops and collect information from them often helps. Most of the session was about the horrific incidents that he had shone light upon. “Art is what abstains me from any of the stress disorders” he says. He had also written books and poems with respect to crime and thriller. He advised student to know terminology used in crime journalism, when a cop informs a murder, they use IPC while communicating so the reporter should be erudite. Basic law and ethics while publishing news is important, while working on cases involving minor, the name and identification must not be disclosed, the same applies for women victims of sexual abuse and harassment.

***

Summary by: Tharun Devarajan / CAJ Student

# புலனாய்வு இதழாளருக்கான தகுதிகள் பற்றி மூத்த பத்திரிகையாளர்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மற்றும் லயோலா கல்லூரி ஒருங்கிணைந்து வழங்கும் 6 மாத இதழியல் படிப்புக்கு பலகட்ட தேர்வுகளுக்கு பிறகு தற்பொழுது 104 மாணவர்கள் பயின்று வருகின்றனர். மாணவர்களுக்கு இதுவரை ஒரு இதழியலாளர் என்பவர் யார்? இதழியலாளருக்கான தகுதிகள் யாவை? ஒரு இதழியலாளர் பின்பற்றவேண்டிய அறநெறிகள் யாவை? ஒரு இதழியலாளராக தங்களை எவ்வாறு வளர்த்து கொள்வது? போன்ற பயிற்சிகள் - அனுபவமிக்க துறைசார் நிபுணர்களைக் கொண்டு வகுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று (20.02.2023) மகாலிங்கம் பொன்னுசாமி (Editor-Input @ News18 Tamil Nadu) மற்றும் செல்வராஜ் அருணாச்சலம் (Assistant Editor @ The Times of India) ஆகியோர் புலனாய்வு இதழியல் பற்றிய வகுப்பு எடுத்தனர்.

தற்பொழுது நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள், சாதிய அடிப்படையிலான குற்றங்கள், பாலியல் ரீதியான குற்றங்கள், ஆணவக்கொலைகள், மணல் கொள்ளை, வளங்களைச் சுரண்டுதல் - போன்ற பல குற்றங்கள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் அரங்கேறிக் கொண்டே வருகின்றன. வயதில் பெரியவர்கள் மட்டுமின்றி இளைஞர்கள், 18-வயதுக்கும் கீழ் உள்ளவர்களும் இந்தக் குற்றங்களில் ஈடுபடுகின்றனர்.

எனவேதான், 18-வயதுக்கும் கீழ் உள்ளவர்களை, செய்யும் தவறுகளில் இருந்து மீட்டெடுத்து குற்ற உணர்வுகளில் இருந்து விடுபட அவர்களுக்கு கல்வி, உணவு, தங்குமிடம் ஆகியவை கொடுத்து அவர்களின் வாழ்வியல் சூழலை மாற்றி அமைக்க அரசால் சிறார் சீர்திருத்தப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க மற்றும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கவும் சட்டமும், துறையும் உள்ளன. இருப்பினும் அந்தக் குற்றங்கள் பற்றிய விசாரணை முழுமையாக நிறைவு பெறுவதில்லை. குற்றங்களைக் கண்டறிவதில் மட்டுமல்லாமல், சில மக்களின் தேவைகளைக் கண்டறியவும்-கண்டறிவதன் வாயிலாக அவர்களுக்கு உதவி புரியவும் புலனாய்வு இதழியல் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தேவையானதாகவும் அமைகிறது.

சரியான குற்றங்களைக் கண்டறியவும், மக்களின் சரியான தேவையைக் கண்டறிந்து - அவற்றிற்கு வழிவகை செய்யவும் புலனாய்வு இதழியல் அவசியமாகிறது. எனவே இதழியல் பயில்வோருக்கு புலனாய்வு இதழியல் என்பது ஒரு சிறந்த கற்றலாகவும், ஒரு சவாலான வேலைவாய்ப்பாகவும் அமையும் என்பதை மாணவர்களுக்கு இருவரும் தெளிவாக விளக்கினர்.

**புலனாய்வு இதழியலில் சேரும்பொழுது அடிப்படையில் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை:**

1) முதலில் அரசின் சட்டதிட்டங்கள் பற்றித் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். 2) முக்கியமாக, தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். 3) இந்திய தண்டனைச் சட்டம் -1860, இந்திய ஒப்பந்தச் சட்டம்- 1872 மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் - 1973 ஆகியவற்றை அறிந்திருக்க வேண்டும்.

**புலனாய்வுக்கு தேவைப்படும் சாதனங்கள்:**

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2. புதிய மனிதர்கள் அறிமுகங்கள்,
3. தரவு மூலங்கள், 4. மறைமுகத் தகவல் சேகரிப்பு.

**புலனாய்வில் தரவுகளின் பங்கு:**

ஒவ்வொரு நாளும் உங்கள் பட்டியலில் குறைந்தது 10 புதிய தொடர்புகளைச் சேகரித்தல், காவல்துறையினரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் ஒரு குற்ற ஆதாரத்தை மறுகட்டமைத்தல், காவல்துறை விதிமுறைகள் மற்றும் அவர்களின் சுயவிவரத்தை தெரிந்துக்கொள்ளுதல்.

**ஒரு புலனாய்வு இதழாளர் பின்பற்றப்பட வேண்டிய சில குறிப்புகள் (ம) முறை :**

- துல்லியமான தகவல்களைச் சேகரிக்க வேண்டும்,
- பொறுமை மிக அவசியம்.
- ஆபத்துகளை எதிர்த்துப் போராடும் துணிச்சல் வேண்டும்.
- தகவல்களை வழங்கும் பொழுது பரபரப்புக்கு உள்ளாக்காமல் தலைப்பை பற்றிய விரிவான விளக்கம் இருக்க வேண்டும்.
- முதலில் புலனாய்வுக்கு சரியான ஒரு செய்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- உரிய மனிதர்களைக் கண்டறிந்து - பதிவில் உங்களுடன் பேச அவர்களைத் தூண்டுதல் வேண்டும்.
- ஒரு நேர்காணலை நடத்த வேண்டும்.
- பின்பு ஆவணங்களைப் பயன்படுத்தவும்.
- குற்றம் தொடர்பான முழு விவரங்களையும் மதிப்பிட முயற்சி செய்ய வேண்டும்.

எனவே இன்றைய சூழலில் புலனாய்வு இதழியல் என்பது அவசியமானதாகவும், தேவையானதாகவும் உள்ளது. அதன் முக்கியத்துவம் பற்றி இதழியல் மாணவர்கள் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது அவசியமானது என்பதை உணர்த்தும் வகையில் வகுப்புகள் அமைந்திருந்தன.

பகிர்வு மற்றும் படம்: ரா. பாரதி / CAJ மாணவி